DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **STC 1/2024** |
| Deposition of Witness for | : PW 3 |
| Name | : வினோத்கோபி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 07.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 7th February 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தச்சநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் பிளம்மிங் வேலைக்கு Helper ஆக வேலை செய்து வருகிறேன். 21.10.2015 ம் தேதி இரவு 11.50–12.00 மணியளவில் நானும், எனது நண்பர் கார்த்திக்கும் சங்கரன்கோவிலிருந்து திருநெல்வேலிக்கு என்னுடைய இருசக்கரவாகனத்தில் சென்றுகொண்டிருந்தோம். என்னுடைய இருசக்கரவாகனத்தை என் நண்பர் கார்த்திக் ஓட்ட நான் அவரது பின்னால் அமர்ந்து சென்றிருந்தேன். குருக்கள்பட்டி டர்னிங்கில் எங்களுக்கு எதிராக வந்த பேருந்து அதிவேகமாக ஏறி வந்தது. அவ்வாறு பேருந்து ஏறி வந்ததால் ரோட்டின் இடது பக்கத்தில் பயணித்துக்கொண்டிருந்த எங்களுக்கு ஒதுங்க இடம் இல்லாமல் பேருந்து எங்கள் வண்டி மீது இடித்துவிட்டது. பேருந்து எங்கள் வண்டியை இடித்தில்

நாங்கள் தூக்கி எறியப்பட்டோம். விபத்தில் எனக்கு தலையிலும், வலது காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டது. 108 ஆம்புலன்சில் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டேன். சங்கரன்கோவில் அரசு மருத்துவமனயிலிருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி ஹைகிரவுண்ட் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டேன். அங்கு சுமார் 3 மாதங்களுக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனக்கு இருமுறை காலில் அறுவைசிகிச்சை வழங்கப்பட்டது. எனது வலது காலில் தற்போதும் பிளேட் உள்ளது. எங்களை இடித்த பேருந்தின் போர்டில் தேனி என்று எழுதியிருந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவம் நடந்த சமயத்தில் சங்கரன்கோவிலிருந்து தாழையூத்துக்கு சென்றோமா என்றால் இல்லை. திருநெல்வேலிக்குதான் சென்றோம். நாங்கள் பயணித்து கொண்டிருந்தது இரவு நேரம் என்றால் சரிதான். இரவு நேரம் என்பதால் எங்களது வண்டியில் மோதிய வாகனம் பேருந்தா லாரியா அல்லது வேனா என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எங்களை பேருந்துதான் மோதியது. எங்களதுவண்டியை மோதிய பேருந்தின் பதிவெண்ணை போலீசார் விசாரணையின்போது நான் கூறினேனா என்றால் கூறவில்லை. நானும், கார்த்திக்கும் பயணித்து சென்ற இருசக்கரவாகனத்தை கார்த்திக்தான் ஓட்டினார் என்றால் சரிதான். எங்களை மோதிய பேருந்தின் ஓட்டுநர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் ஓட்டுநர் யார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. இருசக்கரவாகனத்திலிருந்து தவறுதலாக கீழே விழுந்துவிட்டு காயங்களுக்கான இழப்பீடு கோர இவ்வழக்கில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **STC 1/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : முனியசாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 07.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 7th February 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தச்சநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் சேர்கட்டிங் செய்யும் தொழில் செய்து வருகிறேன். 2015 ம் வருடம் ஒரு நாள் இரவு 12–12.30 மணியளவில் குருக்கள்பட்டி வளைவில் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக அதிகாலை 4.00 மணிக்கு வினோத்கோபியின் நண்பர்கள் என் வீட்டிற்கு நேரடியாக வந்து தகவல் தெரிவித்தார்கள். காயம்பட்ட வினோத்கோபி எனது மகன். தகவல் பெற்றவுடன் நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைத்து விபத்தில் காயம்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. எனது மகனுக்கு தலை மற்றும் வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அதற்கு அறுவைசிகிச்சை திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைத்து செய்யப்பட்டது. எனது

மகனின் வலது காலில் எலும்பு சரியாக சேராததால் மீண்டும் அறுவைசிகிச்சை செய்யப்பட்டது. எனது மகன் சுமார் 1 மாத காலம் அங்கு சிகிச்சை பெற்றார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தார்கள். எனது மகன் விபத்து நடந்த சமயத்தில் இருசக்கரவாகனத்தை ஓட்டிச்சென்றாரா என்றால் இல்லை. கார்த்திக்தான் இருசக்கரவாகனத்தை ஓட்டிச்சென்றார். எந்த வண்டி எனது மகனின் விபத்தை ஏற்படுத்தியது என்று கேள்விப்பட்டேன் என்றால் குமுளி செல்லும் அரசுப்பேருந்து விபத்தை ஏற்படுத்தியதாக கேள்விப்பட்டேன். எனது மகனை பேருந்து மோதவில்லை என்றாலும், அவருக்கு ஏற்பட்டகாயங்களுக்கு இழப்பீடு வாங்க நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலீசார் விசாரணையிலும், என் முதல்விசாரணை சாட்சியத்திலும் முரண்பாடுகள் உள்ளன என்றால். வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **STC 1/2024** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : குமார் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 07.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 7th February 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தாழையூத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். 2015ம் வருடம் விபத்து ஏற்பட்டதற்கு மறுநாள் காலை சுமார் 8 மணியளவில் விபத்து நடந்த இடத்தை சின்னகோவிலான்குளம் போலீசார் பார்வையிட்டனர். விபத்து நடந்த இடததை என் முன்பு பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர். நான் அதில் கையொப்பம் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா. ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து நடந்த இடம் எது என்றால் சங்கரன்கோவில் மெயின்ரோட்டில் கோவிலான்குளம் ஊருக்கு செல்லும் சாலையில் S வளைவில் விபத்து நடந்த இடம் உள்ளது. விபத்து நடந்த இடத்திற்கு அருகில் வீடுகள் எதுவும் இருந்தனவா என்றால் 2 வீடுகள் இருந்தன. பார்வை மகஜரில் கையொப்பம் செய்ய போலீசார் என்னை கேட்டார்கள் என்றால் சரிதான். பார்வை மகஜரில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பார்வை மகஜரில் உள்ள விபரங்கள் போலீசார் என்னிடம் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான். பார்வை மகஜரில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **STC 1/2024** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : மாடசாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 07.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 7th February 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

முதல்விசாரணை:

நான் தற்போது தாழையூத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். 2015ம் வருடம் விபத்து ஏற்பட்டதற்கு மறுநாள் காலை சுமார் 8.30 மணியளவில் விபத்து நடந்த இடத்தை சின்னகோவிலான்குளம் போலீசார் பார்வையிட்டனர். விபத்து நடந்த இடத்தை என் முன்புக்கும், எனது நண்பர் குமார் முன்புக்கும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர். நான் அதில் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

பார்வை மகஜரில் எப்போது கையொப்பம் போட்டேன் என்றால் 2015ம் வருடம் கையொப்பம் போட்டேன். தேதி, மாதம் எனக்கு ஞாபகம் இல்லை. பார்வை மகஜரில் கையொப்பம் போட போலீசார் என்னை கேட்டுக் கொண்டார்கள் என்றால் சரிதான். பார்வை மகஜரில் காவல்நிலையத்தில் என்னுடைய கையொப்பம் பெறப்பட்டதா என்றால் இல்லை. விபத்து நடந்த இடத்தில் வைத்து பெறப்பட்ஃடது. விபத்து நடத்திற்கு அருகில் வீடு இருந்ததா என்றால் வீடு இருந்ததா என்று நான் கவனிக்கவில்லை. பார்வைமகஜரில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் என்னுடன் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் எனது நண்பர் குமார் கையொப்பம் செய்தார். குமாரை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவர் எனது நண்பர். விபத்து நடந்த இடத்திற்கு எதற்காக சென்றேன் என்றால் விபத்து நடந்த இடத்தில் பைக்கை பார்ப்பதற்காக சென்றேன். பார்வை மகஜரில் எழுதியுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**